வழக்காடுவார்கள் என்று பரிசீலிக்கவேண்டியது நியாயம். காரணம், நம்முடைய வழக்குகளுக்கு அவர்கள் எதிர் வழக்காடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அரசாங்கம் பரிசீலித்து பின்னால் முடிவெடுக்கப்படுகிறது.

Thiru K. VINAYAKAM : Apart from the efficiency of the lawyer who applies for this post, is it not a fact that of late recent appointments have been made to this cadre from the political party which is in power?

மாண்புமிகு திரு. செ மாதவன் : அரசியல் கட்சியிலே இருப்பவர்களை வழக்குரைஞர்களாகச் செய்யக்கூடாது என்று விதியிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களையெல்லாம் போடக்கூடாது என்றுகூட விதியிருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் கட்சியின் நேரடி நிர்வாகத்தில் ஈடுபடக்கூடாது என்று பரிசீலிக்கிறோம். மனுச் செய்த பின்னாலே, தனிப்பட்ட கட்சியிலேயிருந்தால் குந்தகம் ஏற்படும் என்ற முறையில் எந்த அரசியல் கட்சியிலும் இருக்கக்கூடாது என்று விதியிருக்கிறது. சேர்வதற்கு முன்னால் அரசியல் கட்சியாக இருந்தால் பாவம் என்று கருதவில்லை. இப்போது இந்த ஆட்சி வந்ததற்குப்பிறகு அப்படிச் செய்வது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வருத்தமாகயிருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல.

Improvements to Cauvery Delta area.

558 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any team of World Bank officials visited the Cauvery Delta areas in Tamil Nadu around 21st October 1969?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

Thiru K. VINAYAKAM : What were the findings of the World Bank officials regarding this Cauvery delta? Were they in a position to give us intelligent suggestions as to how we could improve the scheme already on hand or did they help us with monetary aid?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாசனத் திட்டத்தைப் புதுப்பிக்கும் வடிகால் வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தை நம்முடைய அரசு ஏற்கெனவே தயாரித்து உலக வங்கியின் உதவிக்காக அனுப்பியிருக்கிறது. உலக வங்கியின் நிபுணர்களும் இதைப் பார்வையிட்டிருக்கிறார்கள். திருப்தியளிக்கும் திட்டத்தைத் தயாரித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரின் மூலமாக உலக வங்கியின் உதவியை நாடியிருக்கிறோம். 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த காவிரி டெல்டா பகுதி அபிவிருத்திக்காக, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கடைமடைப் பகுதியைச் சீர்திருத்த ரூபாய் 50 கோடி முதலீட்டில் அங்கு தமிழக அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து உலக வங்கியிடம் மத்திய அரசாங்கத்தின் மூலமாக கடன் கோரியுள்ளதா? அதுபற்றிய விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 49 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பழைய காவிரி கயவாய்ப் பகுதி பாசனத் திட்டத்தைப் புதுப்பிக்கவும் அதற்கு வடிகால் வசதிகள் செய்யவும்

திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. காவிரி கயவாய்ப் பகுதியில் உள்ள வடிகால் திட்டங்களுக்கு ரூபாய் 6·30 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக உலக வங்கியிடம் மத்திய அரசாங்கத்தின்மூலம் கடன் உதவி கோரியிருக்கிறோம். கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, உலக வங்கியின் அதிகாரிகள் காவிரி கயவாய்ப் பகுதியைப் பார்வையிட்டதைப்போல வேறு எந்தெந்தப் பகுதிகளைப் பார்வையிட்டார்கள்? அதைப்பற்றி கருத்துரைகள் ஏதாவது வழங்கினார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரி கயவாய்ப் பகுதியை மட்டும்தான் பார்வையிட்டார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, காவிரி கயவாய்ப் பகுதியைச் செப்பனிடத் தயாரிக்கப்பட்ட திட்டத்தை அங்கத்தினர்களுக்கு அரசாங்கம் வழங்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவரக் குறிப்பை இப்பொழுது கொடுப்பதற்கில்லை.

கடில நதியின் குறுக்கே பாலம்.

*559 வினா—திரு. மு. கந்தசாமி படையாச்சி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டையிலிருந்து திருவெண்ணெய்நல்லூர், 20-வது மைல் தூர பாதையில் உள்ள கடிலம் நதிமீது பாலம் கட்டும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அதற்கான பணம் ஒதுக்கப்பட்டதா?

(இ) ஆம் என்றால், எப்பொழுது அவ்வேலை நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) உளுந்தூர்பேட்டை—திருவெண்ணெய்நல்லூர் சாலை 21/1-வது மைலில் கடிலம் ஆற்றின் குறுக்கே ரூ. 80,000 செலவில் பாலம் ஒன்று கட்டும் திட்டம் மாவட்ட வாரியத் தலைப்பின்கீழ் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. ஆனால் பாலம் கட்டுவதற்காகும் செலவு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதால் பின்னர் இது நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படவில்லை.

(இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் இப்பணியை நிறைவேற்றுவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்கு இந்திய அரசு இசைவு அளித்து இப் பணிக்காகப் போதிய நிதி ஒதுக்கப்பட்டால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இப்பணி நிறைவேற்றப்படுவதற்காக மேற்கொள்ளப்படும்.

திரு. மு. கந்தசாமி படையாச்சி : தலைவரவர்களே, இந்த கடிலம் நதியில் பாலம் கட்டும் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்தும் இதுவரையில் எடுத்துக்கொள்ளாததற்குக் காரணம் என்ன? அப்படிப் பணம் ஒதுக்கியும் அதைச் செய்யாததைப்பற்றி, அங்கேயுள்ள அதிகமான மக்களுக்குப் போக்குவரத்துத் தொல்லை அதிகமாக இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்து, எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்ட முதலீட்டைப்போல இரண்டு மடங்கு முதலீடு செய்வதற்கென வகை செய்யப்பட்டிருந்தது. எனவே